

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 83 – ஒலி: 125 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – கார்த்திகை 29 – சனிக்கிழமை 14 டிசம்பர் 2024 – திருச்சி ★★ 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 83 - Issue 125: Thiruvalluvar Year - 2055 - Karthigai 29 - Saturday 14 December 2024 - Trichy ★★ 12 Pages ₹ 5.00


## மனிதர்களுக்கிடையேயான பாகுபாடுகளைக் களைய – வாழ்நாள் முழுதும் பாடுபட்டவர் தந்தை பெரியார்!

# சமூக நீதி வரலாற்றில் 'வைக்கம் விழா' ஒரு பொன்னேடு!

## 'வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார்' நூற்றாண்டு நிறைவு விழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை !

**வைக்கம் (கேரளா), டிச. 14-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (12.12.2024) "வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா"வையொட்டி கேரள மாநிலம், வைக்கத்தில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகம் ஆகியவற்றைத் திறந்து வைத்து உரையாற்றுகையில், "மனிதர்களுக்கு இடையேயான பாகுபாடுகளைக் களைய, வாழ்நாள் முழுதும் பாடுபட்டவர் தந்தை பெரியார் அவர்கள்!" என்று புகழாரம் சூட்டினார்.**

**மேலும் முதல்வர் அவர்கள், "வைக்கம் விழா - சமூக நீதி வரலாற்றில் ஒரு பொன்னேடு!" என எழுச்சியுடன் குறிப்பிட்டார்.**

இம்மகத்தான விழாவில், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

**இன்னு சரித்திரத்திண்டே ஏடுகளில், தங்க-லிபிகளில் ரேகப்பெடுத்தேண்ட திவசமாணு.**

**ப்ரவேஷனம் நிஷேதிகப்பெட்ட வைக்கத்து - தந்தை பெரியாரினு நம்மள் ஒரு ஸ்மாரகம் நிர்மிச்சிட்-உண்டு. ஒரிக்கல், தந்தை பெரியாரினெ அரெஸ்ட்டு செய்து, ஜெயிலில் அடைச்ச வைக்கத்து-தன்னெயாணு தமிழ்நாடு, கேரள சர்க்காருகளுடெ பேரில் நம்மள் ஈ பரிபாடி ஆகோஷிக்குன்னது.**

**(தமிழாக்கம்: இன்று வரலாற்றின் பக்கங்களில் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்பட வேண்டிய நாள்!**

**எந்த வைக்கம் நகருக்குள் நுழையக் கூடாது என்று தந்தை பெரியார் தடுக்கப்பட்டாரோ - எந்த வைக்கம் நகரில் கைது செய்யப்பட்டாரோ, அதே வைக்கம் நகரில் இன்று மாபெரும் நினைவகத்தை எழுப்பி, தமிழ்நாடு மற்றும் கேரள அரசுகளின் சார்பில் மாபெரும் விழாவை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.)**



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (12.12.2024) கேரள மாநிலம், வைக்கத்தில், கேரள முதலமைச்சர் பினராயி விஜயன் அவர்கள் தலைமையில், திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற "வைக்கம் போராட்டத்தில் தந்தை பெரியார் நூற்றாண்டு நிறைவு விழா"வில், புதுப்பிக்கப்பட்ட தந்தை பெரியார் நினைவகம் மற்றும் நூலகத்தை திறந்து வைத்து, சிறப்புரையாற்றினார்.

தந்தை பெரியாருக்கு எதிராக யாகம் நடந்த ஊரில், இன்றைக்கு புகழ்மாலை சூட்டியிருக்கக்கூடிய நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

### பெரியாரின் வெற்றி – திராவிட இயக்கத்தின் வெற்றி!

இதுதான் பெரியாரின் வெற்றி! பெரியாரியத்தின் வெற்றி! திராவிட இயக்கத்தின் வெற்றி!

அந்த வகையில் சமூகநீதியின் வரலாற்றிலும், இந்த நாள் பொன்னெழுத்துகளால் பொறிக்கப்படும்!

பெரியார் தொடங்கிய திராவிடர் கழகத்தின் தலைவர் அய்யா ஆசிரியர் அவர்களுடைய முன்னிலையில், பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரான நான், தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்ற பொறுப்புடன் இந்த நினைவகத்தை திறந்து வைப்பது;

எனக்குக் கிடைத்தி ருக்கிற மிகப்பெரிய வரலாற்றுப் பெருமையாக அமைந்திருக்கிறது!

இந்த நேரத்தில், என் நெஞ்சின் அடி ஆழத்தில்

### தமிழ்நாடு பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலுவை மனதாரப் பாராட்டுகிறேன்!



**வைக்கம் போராட்டம் எப்படி கம்பீரமானதோ, அதைப் போலவே இந்த நினைவகத்தையும் கம்பீரமாக, அழகியலோடு - அறிவுக் கருவூலமாக உருவாக்கியிருக்கும் தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். அவருக்கும், இந்தத் துறையின் அதிகாரிகள், அலுவலர்கள், கட்டுமான நிபுணர்கள் அனைவருக்கும் என்னுடைய பாராட்டுகள்!**

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஜனநாயக விரோதத் திட்டம்!

# 'ஒரே நாடு, ஒரே தேர்தல்!'

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**புதுடெல்லி, டிச.14-**

**'ஒரே நாடு ஒரே தேர்தல்' சட்ட முன்வடிவிற்கு ஒன்றிய அமைச்சரவை நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்துள்ளது. அடுத்த வாரம் நாடாளுமன்றக் கூட்டத்தில் இந்த சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.**

**இந்நிலையில் இந்த சட்ட முன்வடிவிற்கு கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது கடும் எதிர்ப்பை தெரிவித்து சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.**

இந்தியாவில் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளுக்கு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தேர்தல் நடத்தப்படுகிறது. ஒவ்வொரு சட்டமன்றத்தின் பதவிக்காலம் முடிவடையும் காலத்திற்கு ஏற்ப தேர்தல் நடைபெறுகிறது.

இதனால், அடிக்கடி தேர்தல் நடைபெறுவதால் மக்கள் நலத்திட்டங்களை செயல்படுத்த முடியவில்லை எனக் கூறிய ஆளும் பாஜக அரசு நாடு முழுவதும் 'ஒரே நாடு ஒரே தேர்தல்' திட்டத்தை செயல்படுத்த முனைப்பு காட்டி வருகிறது. ஒரே நாடு ஒரே தேர்தல் மசோதா நடப்பு நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடரில் தாக்கல் செய்ய ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

### பல சவால்கள் உள்ளன!

'ஒரே நாடு ஒரே தேர்தல்' தொடர்பாக பல்வேறு சாதக பாதக அம்சங்கள் கூறப்பட்டாலும், இதை அமல்படுத்துவதில் பல சவால்கள் உள்ளன.

ஒரே நாடு ஒரே சட்டத்தை அமல்படுத்த அரசியல் அமைப்பில் திருத்தம் கொண்டு வர வேண்டியது அவசியம். நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு மெஜாரிட்டி இருந்தால்தான் இதை நிறைவேற்ற முடியும்.

அது மட்டும் இன்றி நாட்டில் உள்ள மொத்த மாநிலங்களில் பாதிக்கும் மேற்பட்ட மாநிலங்கள் இதை ஏற்றுக் கொண்டு ஒப்புதல் அளிக்க வேண்டும். அரசியல் அமைப்பு சட்டம் பிரிவுகள் 83, 85(2)b, 174, (2) (B), 356 மற்றும் 75(3) ஆகியவற்றில் திருத்தம் செய்ய வேண்டும். மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 1951லும் முக்கிய திருத்தங்கள் செய்ய வேண்டியது அவசியம்.



### நடைமுறை சிக்கல்கள்!

அதுமட்டும் இன்றி நாடு முழுக்க ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த வேண்டும் என்றால் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் பெருமளவில் தேவைப்படும். பாதுகாவலர்கள் எண்ணிக்கையும் அதிகம் தேவைப்படும். இதுபோன்ற பல்வேறு நடைமுறை சிக்கல்கள் உள்ளன.

இந்த மசோதா நிறைவேறி எல்லாம் சரியாக நடந்தால் அடுத்த 2029-ல் ஒரே நாடு ஒரே தேர்தல் நடத்தப்பட வாய்ப்புள்ளது.

ஆனால் தற்போதைய பா.ஜ.க. கூட்டணி அரசுக்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லை என்பது கவனிக்கத் தக்கது.

### முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு!

இந்நிலையில் இதற்கு எதிர்ப்பு தெரிவித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள பதிவில், இந்திய ஜனநாயகத்தின் மீதான இத்தாக்குதலை நம் ஆற்றல் அனைத்தையும் ஒன்று திரட்டி எதிர்ப்போம் என்று குறிப்பிட்டுள்ளார்.

'ஒரே நாடு ஒரே தேர்தல்' சட்டமுன்வடிவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதற்கு எதிர்ப்பு தெரிவித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**கொடுங்கோன்மைக்கு வழிவகுக்கும், 'ஒரே நாடு ஒரே தேர்தல்' சட்டமுன்வடிவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய ஒன்றிய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.**

**நடைமுறைக்கு ஒவ்வாத, மக்களாட்சிக்கு எதிரான இந்த நடவடிக்கை; மாநிலங்களின் குரலை அழித்துவிடும்; கூட்டாட்சியியலைச் சிதைத்துவிடும்; அரசின் ஆட்சி நிர்வாகத்துக்குத் தடையினை ஏற்படுத்தும்.**

எழுக இந்தியா!

**இந்திய ஜனநாயகத்தின் மீதான இந்தத் தாக்குதலை நம் ஆற்றல் அனைத்தையும் ஒன்று திரட்டி எதிர்ப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.